1978 மார்ச் 20]

புதுக்கோட்டை மாமன்னர் அரசினர் கல்லூரி.

*629 வினா—திரு. நா. சுந்தரராஜ்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாமன்னர் அரசினர் கல்லூரியில் வரும் கல்வியாண்டில் பட்ட மேற்படிப்புக்கள் தொடங்க நடவடிக்கை ஏதேனும் மேற்கொள்ளப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: ஆம்.

திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான்: தலைவரவர்களே, சிறிது நாளைக்கு முன்பு பத்திரிகையிலே எம்.காம். வருவதாகப் போட்டிருந்தது. அதுபற்றி கேட்டதற்கு அமைச்சரவர்கள் ஆம் என்று இங்கே பதில் சொன்னார்கள். அதே நேரத்தில் கல்லூரியில் இருக்கக்கூடிய இடம் இப்போது இருக்கக்கூடிய வகுப்புகளுக்குத்தான் இருக்கிறது. எம்.காம்., எம்.ஏ. (ஹிஸ்டரி) போன்றவைகளுக்கு அதிக கட்டிடங்கள் கட்ட வேண்டிய அவசியம் இருக்கிறது. அரசு அதைப் பரிசீலனை செய்து, கட்டிடங்களைக் கட்ட முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, அதுபற்றித் தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. க. சுப்பு: தலைவரவர்களே, இந்த புதுக்கோட்டை கல்லூரியில் போஸ்ட் கிராஜுவேட் படிப்புக்கு என்னென்ன பாடப் பிரிவுகளைத் தொடங்க அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, புதுக்கோட்டை கல்லூரியில் சென்ற ஆண்டு பட்ட மேற்படிப்பு தொடங்குவதைக் குறித்து பல்கலைக்கழக இணைப்பு மானியக் குழு ஆராய்ந்து, ஒப்புதல் அளித்திருக்கிறது. அவர்கள் . இந்தக் கல்லூரியில் எம்.காம். பிரிவைத் தொடங்க அனுமதித்திருக்கிறார்கள்.

சேலத்தில் மகளிர் கல்லூரி.

*630 வினா—திரு. மு. ஆறுமுகம்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் நகரில் மகளிர் கல்லூரி திறக்கும் உத்தேசம் இந்த அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.